**எம்பிலிபிடிய பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 05 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 29 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் எம்பிலிபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய மூலதன செலவு ரூபா 6,295,678 மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டின் செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்வரும் நிதியாண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய மூலதன வருமானம் ரூபா 6,208,700 மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்வரும் நிதியாண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் பேரேட்டு கணக்குகளின் மீதிகள் நிதிக்கூற்றுக்களிற்கு பிரதி பன்னும் போது ஏற்பட்டுள்ள தவறு காரணமாக ஆண்டின் மீண்டுவரும் செலவுகள் ரூபா 430,000 இனால் மிகை மதிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டின் செலவுகளை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் நிதியாண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய ஊழியர் கடன் வட்டி வருமானம் ரூபா 341,592 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டின் வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்வரும் நிதியாண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | காசு புத்தக மீதி மற்றும் நிதி நிலமை கூற்றின் காசு மீதிக்கிடையில் ரூபா 123,821 ஆன வித்தியாசம் நிலவியது. | காசு புத்தக மீதி மற்றும் நிதி நிலமை கூற்றின் காசு மீதிக்கிடையிலான வித்தியாசத்தை இனங்கண்டு தீர்க்க வேண்டும். | எதிர்வரும் நிதியாண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் 07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடுகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 10,257,640 ஆன வித்தியாசம் நிலவியது. | முன்னைய ஆண்டுகளிலிருந்து நிலவிவரும் இவ்வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு தீர்க்க வேண்டும். | குறித்த வித்தியாசம் முன்னைய ஆண்டுகளிலிருந்து நிலவிவருவதால் எதிர்காலத்தில் வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிந்து சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 | 1988 முதல் 2018 வரையான காலத்தினுள் 33 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,728,579 ஆன முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1988 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரை தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 1,138,226 வை பதிவழிக்கும் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கின்றேன் |

**(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 15 வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்புடைய வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதனையை துரிதமாக மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆளணியினரிற்காக வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் நிதியாண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2017 ஜுலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் நிதியாண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2017 திசெம்பர் 21 ஆம் திகதி 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமை சுற்றறிக்கையின் 2 (i) பந்தி | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் கிடைத்த டபல் கெப் வண்டியின் பதிவுரிமையை சபைக்கு சுவீகரித்துக் கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் கெப் வண்டியை சுவீகரித்துக் கொள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ள போதும் இது வரை சுவீகரித்தல் மேற்கொள்ளப்படவில்லை என அறிவிக்கிறேன். |
| (உ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய 2018/இ-உள்ளூராட்சி 01 இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் போது சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு சேவை பெறுனர்களுக்கு தேவையான வசதிகளை வழங்க வேண்டும். | எதிர்வரும் நிதியாண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 18,534,795 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 14,124,128 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 6,631,131 | 5,732,840 | 6,862,416 | 3,007,304 | 7,237,764 | 6,838,944 | 5,204,861 | 5,904,263 |
| (ii) | வாடகை | 12,085,487 | 11,639,465 | 11,218,661 | 445,162 | 12,062,300 | 11,648,839 | 11,648,839 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,704,000 | 1,522,475 | 1,466,275 | 195,600 | 1,477,000 | 1,616,154 | 1,877,354 | 199,400 |
| (iv) | ஏனைய வருமானம் | 22,929,800 | 26,557,946 | 18,081,932 | 16,223,389 | 16,833,300 | 17,986,342 | 27,500,683 | 7,321,600 |
| | | **43,350,418** | **45,452,726** | **37,629,284** | **19,871,455** | **37,610,364** | **38,090,279** | **46,231,737** | **13,425,263** |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியல் ரூபா 1,726,967 ஆன நிலுவை வீதவரி மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் கூட்டுத்தொகை ரூபா 1,356,622 உள்ளடங்கியிருந்தது. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புதிய மதிப்பீட்டின் மீது 2020 ஆண்டு முதல் வரி அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதால் நிலவுகின்ற பிரச்சினையை தீர்த்துக் கொண்டு வருமானம் சேர்க்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.3 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டியதாக நிலவிய நிலுவை நீர் கட்டணம் ரூபா 2,568,482 ஆனதுடன், அதனுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாகவுள்ள ரூபா 1,078,594 தொகை காணப்பட்டது. அறவிட முடியாது என தீர்மானிக்கப்பட்ட ரூபா 1,356,229 வை பதிவழிக்க உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், நிலுவையை அறவிட சபை போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பலலேபெத்த நீர் கருத்திட்டத்தில் 23 நீர் நுகர்வோர்களின் விநியோகம் துண்டிக்கப்பட்டு உள்ளதாகவும், அக் கருத்திட்டத்தின் நிலுவை நீர் கட்டணம் ரூபா 55,980 தொடர்பாக சமாதான சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் நடமாடும் சேவை மூலம் நிலுவை நீர் கட்டணத்தை அறவிட எதிர்பார்ப்பதாகவும் அறிவிக்கிறேன். |

**2.2.4 வியாபார அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள 248 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதும், பொது சுகாதார அதிகாரியின் பரிந்துரை தாமதத்தால் விநியோகிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 27 ஆனது. | வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய அனைத்து நிறுவனங்களிற்கும் வருடத்தின் முதல் காலாண்டினுள் வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானத்தை ஏற்றுக் கொள்வதாக அறிவிக்கிறேன். |

**2.2.5 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசம்பர் 31 திகதிற்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 16,210,240 ஆனதுடன், கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை 2020 மார்ச் வரை இனங்கண்டிருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை தாமதமின்றி அறவிட வேண்டும். | 2019 ஏப்ரல் வரை நீதிமன்றத் தண்டப்பண அட்டவணை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு தயாரித்து அனுப்பப்பட்டுள்ளதுடன், இரத்தினபுரி காணி பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2019 ஜுன் வரை முத்திரைக் கட்டண பணம் கிடைத்துள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பாதீட்டு திட்ட பிரகாரம் ஆண்டினுள் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த 78 அபிவிருத்தி செயற்பாடுகளில் 77 இனை மேற்கொண்டிருக்காததுடன், பாதீட்டு திட்டத்திற்கு உட்படுத்தப்படாத மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 3,394,458 ஆன 06 அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருடாந்த பாதீட்டினை பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்த வேண்டும். | பிரதேச அபிவிருத்தி கருத்திட்டங்களிற்கான முன்னுரிமையை மகா சபை தீர்மானம் பிரகாரம் மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

**(ஆ)** திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் ஒரு மாதத்திற்கு 180 டொன் அளவு கழிவுகள் ஒன்று சேர்ந்த போதும், தேசிய கொள்கைகளிற்கு இணங்க முறையான கழிவுப் பொருள் முகாமை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான கழிவுப் பொருள் முகாமை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். | கழிவுப் பொருள் முகாமை நடவடிக்கைகளை மேற்கொள்ள சபைக்கு சொந்தமாக குறிப்பான காணியொன்று இல்லாததால் காணியொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| செயலாளர் பதவி 2013 ஆண்டு முதல் வெற்றிடமாக உள்ளதுடன், அதற்காக பதிற்கடமை அடிப்படையில் அலுவலளர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட 02 தொழிநுட்ப பதவியில் ஒரு பதவி 2016 திசெம்பர் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயலாளர் பதவிக்கு கோரிக்கை விட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பது எனவும், தொழிநுட்ப அலுவலர் வெற்றிடம் தொடர்பாக பல முறைகள் கோரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தவிசாளருக்கு மகாசபையினால் அங்கீகரித்த 750 லீட்டர் எரிபொருள் மாதாந்தம் வழங்கப்படுகையில் அதற்கு மேலதிகமாக ரூபா 5,000 மாதாந்த எரிபொருள் படியொன்றும் வழங்கப்பட்டிருந்தது. 2018 மே மாதம் முதல் 2019 திசெம்பர் வரையான காலத்தினுள் அவ்வாறு செலுத்தியிருந்த எரிபொருள் படி கூட்டுத் தொகை ரூபா 95,000 ஆனது. | மாதாந்த எரிபொருள் படியொன்று வழங்கப்படுவது முறையற்றதாகும். | உ ஆ சுற்றறிக்கை 03/2012(01), மற்றம் 2014 நவம்பர் 28 மற்றும் 2014 திசெம்பர் 08 திகதிய கடிதம் பிரகாரம் தவிசாளரிற்கு ரூபா 5,000 படியொன்றை வழங்க அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், சபை தீர்மானமொன்றின் மீது தவிசாளரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 750 லீட்டர் எரிபொருள் வழங்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2011 ஆண்டில் மகநெகும கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட 07 பாதை அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிர்மாண பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்த சமுதாய அடிப்படை சங்கத்திற்கு அவ்வேலைகளுக்கான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ள சபையின் எவ்வித பொறுப்பும் இல்லாதிருக்கையில் சபையின் அங்கீகாரமும் இன்றி தவிசாளரினால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்து தேவையான தளப்பரப்பு கற்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதற்காக அந் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 2,088,000 வை குறைத்துக் கொள்ளாது 04 வேலைகளின் இறுதி பட்டியல்கள் மற்றும் தடுப்புப் பணம் குறித்த சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த 04 வேலைகளிற்குரிய தளப்பரப்பு கற்களை வழங்கிய நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,308,780 வை செலுத்தாததால் குறித்த நிறுவனத்தினால் சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்ததுடன், 2019 ஜுலை வரை குறித்த வழக்கின் வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 111,475 செலவிடப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு பொறுப்புதாரிகள் இனங்காணப்பட வேண்டும். | இவ்வழக்கு தற்போது நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவதுடன் அதற்காக ஆஜராகும் வழக்கறிஞரிற்கு சபை அங்கீகாரத்தின் மீது வழக்கறிஞர் கட்டணம் செலுத்தியுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அதன் போது இருந்த தவிசாளரின் பயன்பாட்டிற்காக 2011 ஏப்ரல் மாதம் ரூபா 88,950 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மடிக் கணனியை அவர் 2012 ஆண்டு மாகாண சபை அங்கத்தவராக தெரிவாகி செல்லுகையில் மீள் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் நிலையான தன்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டியதுடன், நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஜனவரி 16 திகதி மகா சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

#### 3.4.2 வருடாந்த பண்டக கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 வருடாந்த பண்டக கணிப்பீடு அறிக்கை மூலம் பற்றாக் குறையாக இனங்காணப்பட்ட பிரதான அலுவலகத்திற்குரிய 42 பண்டக வகைகளிற்குரிய 174 அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.5 பெறுகை

#### 3.5.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காத போதும் ரூபா 3,299,480 பெருமதியான பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரித்து அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். | 2020 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் கொள்வனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.5.2 வழங்கல் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆண்டிற்காக வழங்குனர்கள் பதியப்பட்டிருந்த போதும், பதிவு செய்யப்பட்டவர்களின் பதிவேடொன்று பேணப்படவில்லை. அவ்வாறே சில்லுகள் மற்றும் டியுப் கொள்வனவு செய்ய சபையின் பதிவு பெற்ற வழங்குனர்கள் இருக்கையில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 3.4.3 (இ) இற்கு மாற்றமாக பதியப்பட்ட ஒரு வழங்குனரிடமிருந்து மற்றும் பதியப்படாத இரண்டு வழங்குனர்களிடமிருந்து விலை மணு கோரி ரூபா 952,200 செலவில் சில்லுகள் மற்றும் டியுப்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டிற்காக வழங்குனர்களின் பதிவேடு ஒன்றை பேண நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எதிர்காலத்தில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### தீர்க்கப்படாத அவதானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் சேர்க்கப்படும் உக்கலடையும் மற்றும் உக்கலடையா கழிவுகளை வேறாக்காது சந்திரிக்கா வாவி அன்மையிலுள்ள அரச வெற்றுக் காணியிற்கு வெளியேற்றப்பட்டு காணப்பட்டது. முறையற்ற கழிவுப் பொருள் வெளியேற்றத்தினால் வாவியின் நீர் அசுத்தமடைவதாகவும், உக்கலடையா கழிவுகள் காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் சுகாதார வைத்திய அலுவலளர் அறிக்கை செய்திருந்ததுடன், கழிவுகளை சந்திரிகா வாயிற்கு அறுகில் வெளியேற்றுவதற்கு எதிராக பிரதேசவாசிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளினால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடாத்தப்பட்டிருந்தது. | பொருத்தமான காணியொன்றை சுவீகரித்து முறையாக கழிவுப் பொருள் முகாமை வேலைத்திட்டத்தை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். | கழிவுப் பொருள் முகாமை செயற்பாடுகளை மேற்கொள்ள சபைக்கு சொந்தமாக உரிய காணியொன்று இல்லாததால் காணியொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவிக்கிறேன். |